**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**

## MCOP No. 79/2023

| | |
|---|---|
| Ranking of Witness | PW.1 |
| Name | கார்த்திகேயன் |
| Father's Name/Husband Name | நடராஜன் |
| Age | 45 |
| Address | பிளாட் எண்.4B, அவிங்னா பேரகன், ஈச்சங்கரை கிராமம், மகேந்திரா சிட்டி, செங்கல்பட்டு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.05.2026.
(சாட்சி மீண்டும் வரழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)
**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை, என் தந்தை தான் கொடுத்தார். விபத்தை என் தந்தை பார்க்கவில்லை. புகார் ஒரு நாள் காலதாமதமாக அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. எனது வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. ம.த.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கை 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்று சொன்னால் சரிதான். இதுபோன்று எனது வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஏன் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ம.த.சா.ஆ.6 ஆவணத்தில் இணைத்து தாக்கல் செய்துள்ளேன். ம.த.சா.ஆ.6 ஆவணத்தின் படி எனது வாகனத்தின் வலதுபக்க சைகை விளக்கு உடைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். என் வாகனத்தின் மீது மோதிய வாகனத்தின் இடதுபக்க கதவு

N. Karthi
06/05/2026

சேதமடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலிசாரின் மாதிரி வரைபடம் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் இடது புறத்தில் நான் தான் திடீரென எனது வாகனத்தைத் திருப்பி மோதி விபத்து ஏற்படுத்தினேன் என்றும், அதனால் தான் மாதிரி வரைபடத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மீது மோதிய வாகனம் TATA ACE வாகனமாகும். அந்த வாகனம் பொது பயன்பாட்டிற்கான சரக்கு வாகனம் என்றால் சரிதான். அந்த வாகனத்தை ஓட்டிய நபருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று ம.த.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.7 ஆவணத்திலும் சரக்கு வானத்தை ஓட்டுவதற்கான உரிமம் 1ம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு ரூ.6,50,000/- செலவானது. அந்த செலவினத்திற்கான தொகையினை இரண்டு காப்பீடு நிறுவனங்கள் மருத்துவமனைக்குச் செலுத்தியது. ஒன்று நிவாபூபா என்ற எனது தனிநபர் காப்பீடு, மற்றொன்று எனது நிறுவனத்தின் காப்பீடாகும். அதன் பெயர் தெரியவில்லை. மருத்துவமனை செலவு முழுவதையும் காப்பீடு நிறுவனங்கள் செலுத்திவிட்டது என்றால் எனது தனிநபர் காப்பீடானது ரூ.5,00,000/- மட்டுமே உள்ளது, மீதமுள்ள ரூ.1,50,000/- ஐ எனது நிறுவனத்தின் காப்பீடு எவ்வளவு தொகை செலுத்தியது என்று சரியாக தெரியவில்லை. நான் எனது தொகையினை மருத்துவமனைக்கு செலுத்தினேன் என்பதற்கான ஆவணம் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் மருத்துவ பில்கள் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அவற்றை ஆவணமாக

N. Kavitha
06/05/2026

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தொகை மருத்துவமனைக்கு செலவளித்தேன் என்ற விவரம் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்தெந்த நிறுவனம் மருத்துவ செலவிற்கு தொகைகள் வழக்கியது என்ற விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தனியார் நிறுவனத்தில் HR ஆக வேலை பார்த்தேன். எனது பணியின் தன்மையானது நிறுவனத்திற்கான பணியாளர்களை தேர்ந்தெடுப்பது மற்றும் பொது நிர்வாக பணியாகும். எனக்கு ஏற்பட்ட காயங்கள் எனது பணியின் தன்மையினை எவ்வகையிலும் பாதிக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்சமயம் மாதம் ரூ.1,50,000/– ஊதியம் பெறுகிறேன். விபத்து ஏற்பட்ட டிசம்பர் 2022 ற்கு முன்பான 3 மாதங்களுக்கான மாத ஊதியம் பட்டியலை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அப்போது நான் மாதம் ரூ.1,07,000/– ஊதியம் பெற்றேன், தற்போது மாதம் ரூ.1,50,000/– ஊதியம் பெறுகிறேன் என்றால் சரிதான். அதனால் எனக்கு வேலை பாதிப்போ, வருமான இழப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு என் மீதான தவறா? 1ம் எதிர்மனுதாரர் மீதான தவறா? என்பதை காண்பிக்கும் வகையிலான இறுதியறிக்கையினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் உண்மை இல்லை என்று வழக்கினை போலிசார் முடித்துவிட்ட விவரம் எனக்கு தெரியாது. புகாரில் உண்மை இல்லை என்றும், வழக்கினை முடிக்கபோகிறோம் என்றும் போலிசார் என் தந்தைக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அதுபோன்ற அறிவிப்பு வரவில்லை என்று என் தந்தை என்னிடம் சொன்னார். விபத்திற்கு நான் தான் காரணம் என்பதாலும், 1ம் எதிர்மனுதாரர் மீது எந்தவிதமான

6/5/26

N. Karthi
06/05/2026

தவறுகையும் இல்லை என போலிசார் தீர்மானித்ததாலும், அந்த புகாரை முடித்துவைத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. விபத்து எனது தவறுகையால் ஏற்பட்டது என்பதால் எனக்கு இழப்பீடு தொகை கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், எனக்கு இழப்பீடு எதுவும் பெறவேண்டுமென்றால் அதனை 1ம் எதிர்மனுதாரரிடம் தான் பெறவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யவில்லை என்றும், நான் தவறான ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே காப்பீடு ஒப்பந்தம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் எந்தவிதமான இழப்பீடும் எனக்கு வழங்கவேண்டியதில்லை என்றும், இழப்பீடு வழங்குவதாக இருந்தால் 1ம் எதிர்மனுதாரர் வழங்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை - இல்லை.</u>**

N. Ken[illegible]
06/05/2026

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 06.05.2026 அன்று என் முன்னிலையில் கைரயொப்பம் செய்தார்.

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.